www.tamilarangam.net

தமிழ் தகவல் நடுவம் TIC TAMIL INFORMATION CENTRE

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE ; FRANCE

இதழ்: 2
ஜூன்
1993

# மீட்சி

தமிழ் தகவல் நடுவத்தின் மாதாந்த வெளியீடு

## தமிழக அகதி முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகளின் சுகாதார நிலை

டாக்டர் பரராசன் அருளானந்தம்

புலம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக வாழும் எண்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாடு அரசு தாபனங்களின் கெடுபிடிக்குள்ளாகி மேலும் பாதிப்படைந்து வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பரிகாரமாக இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக முடுக்கி விடப்பட்ட செயல்முறைகள், வீடு இழந்து, உடமைகள் இழந்து போரின் பெருந் துன்பத்துக்குள்ளான, மிகவும் நொய்தான நிலையில் புலம்பெயர்ந்து தஞ்சம் கோரியுள்ள அகதிகளை, பல்வேறு வழிகளில் இம்சைக்குள்ளாக்குகின்றன. இதற்குப் பரிகாரம் தேடுமுகமாக மனிதநேய, மனித உரிமை தாபனங்கள், நல்நோக்கம் கொண்ட தனிநபர்கள் எனும் பல்வேறு பிரிவினர் பல வழிகளில் தம்மாலான முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

தமது சொந்த நாட்டில் இடைவிடாத ஆய்க்கினை அநியாயங்களுக்கு ஆளாகித் தமது உயிரினைக் காப்பாற்றும் நோக்குடன் தப்பித்து வந்த அப்பாவி மக்களை இவ்வாறு இழிவுபடுத்தி உதாசீனப்படுத்துவதை நீதியற்ற ஒரு செயலாகப் பலர் கருதுகின்றார்கள். இந்நிலைப்பாட்டிலிருந்து இந்திய அரசினை மாற்ற, அரசு சார்பற்ற மனிதநேய, மனித உரிமை தாபனங்கள் பல தொடர்ந்தும் முயற்சி செய்து வருகின்றன. இத் தாபனங்களின் நன்முயற்சிகளை மேலும் ஊக்குவிக்க மேற்கத்திய நாடுகளில் வாழும் தமிழர்களின், முக்கியமாகத் தமிழ் அகதிகளின், பங்களிப்பு மிக முக்கியமானது.

இந்தியாவின் இன்றைய அரசியல் சூழலில் தமிழ் அகதிகளின் உரிமைகளைப் பேணுவதற்கோ அல்லது அவர்களுக்கென பகிரங்கமாகக் குரல் கொடுத்து நல்ல மாற்றங்களை ஏற்படுத்தவோ கூடிய நிலையில் எந்தவொரு தாபனமும் இன்று இந்தியாவில் இல்லை. இந்திய அரசு தாபனங்களுடன் சேர்ந்து நின்று தமிழ் அகதிகளின் தேவைகளை, சிறு அளவில் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் சில தாபனங்கள் இருப்பதனையும் நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. தமிழ் அகதிகள் இந்தியாவில் படும் அவஸ்தைகளிலிருந்து பெரியளவில் அவர்களை மீட்கக்கூடிய அளவில் இன்று இருப்பவர்கள் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களே என்பதனை முற்றாக நாம் உணர வேண்டும். இது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் கடமையும்கூட என்பதனை மறக்கலாகாது.

எட்டு வருடங்களுக்கு மேலாக இந்திய அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் அகதிகளினது சுகாதார நிலை பற்றிய டாக்டர் பரராசன் அருளானந்தத்தின் சில அவதானிப்புகளை இங்கு தருகின்றோம்.

**டாக்டர் அருளானந்தம்,** ஐக்கிய ராச்சியத்தின் தென் கிழக்கு கென்ற் சுகாதார அதிகார சபையின் பொதுச் சுகாதார மருத்துவத் திணைக்களத்தின் மூத்த மருத்துவ அதிகாரியும், சமூக சுகாதார பீடத்தின் உறுப்பினருமாவார்.

இவர் கடந்த மார்ச் மாதம் மேற்கொண்ட தமிழக பயணத்தின்போது, அகதி முகாம்கள் பலவற்றிற்கும் சென்றதோடு, தமிழ் அகதிகள் பலரைப் பார்வையிட்டுமிருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"**பா**லாறு அணைக்கட்டு, சாலவன் குப்பம், கட்மன்னார்குடி, ஒக்கூர், திண்டுக்கல், லேனா விளக்கு மற்றும் தோப்புக்கொல்லை ஆகிய இடங்களில் உள்ள பல முகாம்களைப் பார்வையிட்டேன். அண்மைக்கால அசம்பாவிதங்களால் எல்லா முகாம்களையும் பார்வையிட அனுமதி பெறுவதில் சிரமமிருந்தது. என்றாலும் மதுரைக்கு அருகிலுள்ள முகாம்களிலிருக்கும் சிறுவரை MMSSS நிலையத்தில் பரிசீலிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதேபோல் OFERR காரியாலயத்தில் திருச்சியை அண்மித்த முகாம் சிறாரைப் பரிசீலித்தேன். 1986, 1987ஆம் ஆண்டுகளில் பிறந்து இன்று பள்ளிப் பிராயம் அடைந்துள்ள 200க்கும் மேலான சிறுவர் பற்றிய வைத்தியக் குறிப்புகளை எடுத்துள்ளேன். இக்குறிப்புகளைப் பகுத்தாராயவுள்ளேன்.

## போஷாக்குக் குறைவு

பின்னடைந்த வளர்ச்சிக்கும் நோய் தொற்றும் இலகு நிலைக்கும் இடங்கொடுக்கும் போஷாக்குக் குறைவு நிலை முகாம்களில் உள்ள குழந்தைகள் மத்தியில் பரந்துபட இருக்கின்றது. நான் பரிசீலித்த 5–7 வயதினர் 3 வருடங்களுக்குக் குறைவாகவே இந்தியாவில் இருந்திருப்பதால் அகதி முகாம் நிலைமை மட்டுமே இதற்கான முழுக்காரணி என்று சொல்ல முடியாது. சமூகப் பதற்றம், இடப்பெயர்ச்சி, பாது காப்பின்மை, போதுமான உழைப்பின்மை ஆகிய காரணிகளும் சிறுவரின் பராமரிப்பில் பெரும் மாற்றத்தினைக் கொண்டு வரும். உதாரணமாக நெடுந் தீவிலிருந்து இடம் பெயர்வதற்கு அங்கு நிலவிய உணவுப் பற்றாக்குறையும், பாதுகாப்பின்மையும் கார ணிகளாகும். கூடுதல் ஊட்டத்தின் மூலம் போஷாக் கின்மையை பெருமளவிற்கு நிவர்த்திக்கலாம். ஒல்லாந்து தேவாலய உதவியுடன் தொடங்கப்பட்ட ஊட்ட வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியவர்களைப் பாராட்டுகின்றேன். இரு வாரங்களுக்கு ஒரு முறை இந்திய அரசு வழங்கும் பண உதவியும், மானிய அடிப்படையில் கிடைக்கும் அரிசி மற்றும் பங்கீட்டுப் பொருட்களும் இல்லாதிருந்தால் பெருந்தொகையான அகதிகள் மடிந்திருப்பர். இந்திய அரசின் இச்செயல் பாட்டினை நான் நன்றியுடன் இனங்காண்கிறேன்.

> **டாக்டர் அருளானந்தத்தின் கூற்றுப்படி தமிழ் நாட்டின் 18 மாவட்டங்களில் அமைந்திருக்கும் 136 தமிழ் அகதி முகாம்களில் மார்ச் மாதத்தில் 80,663 பேர் இருந்திருக்கிறார்கள்.**

## உயிர்ச்சத்து A பற்றாக்குறையும் கொழுப்புணவும்

நிரந்தரக் குருட்டுத்தன்மையை ஏற்படுத்தக்கூடிய உயிர்ச்சத்து A பற்றாக்குறை போஷாக்கின்மையுடன் தொடர்புடையது. கொழுப்பில் காணப்படும் உயிர்ச்சத்து A பற்றாக்குறைக்கு எண்ணெய், கொழுப்பு குறைந்த உணவை உட்கொண்டமையே காரணியாகும். இலங் கையின் பிரதான கொழுப்புணவான தேங்காய் இந்தி யாவில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய ஒரு பொருளாகும். ஒரு தேங்காயின் விலை ஏறத்தாழ இந்திய ரூபாய் 7.00 ஆகும். ஆக, ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 210 பெறுமதியான தேங்காய் தேவைப்படும். இது அகதிகள் நிலையில் இயலாத காரியமாகும். 40% கொழுப்புச்சத்துக் கொண்ட சமை யல் எண்ணெய்களான எள், நிலக்கடலை எண்ணெய்களை மாற்றீடாகப் பாவிப்பதனால் நிலைமையை நிவர்த் திக்கலாம். மாற்றீட்டு முறையினால் ஊட்டச்சத்தினைப் பெருக்கலாம். இந்நிலையில் உடல் வளர்ச்சிக்காக புரதச்சத்து மீதப்படும். சமையல் எண்ணெய் சேர்ப்பதால் தாவர உணவில் காணப்படும் உயிர்ச்சத்து A யினை உண்டுபண்ண முடியும். தாமாகவே A உயிர்ச்சத்தினை கொண்டவையல்ல இச்சமையல் எண்ணெய் என்பது கவனிக்கப்பட வேண்டியது. சமையல் எண்ணெய் அத் தியாவசிய கொழுப்பு அமிலங்களையும் உடலுக்கு வழங்கும்.

## உயிர்ச்சத்து A ( MEGADOSE VITAMIN A )

உயிர்ச்சத்து A யினை பெருமளவில் மருந்தாகப் பாவிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டாலும் அது எல்லா அகதி முகாம்களையும் சென்றடையவில்லை. 2 முதல் 7 வரையிலான குழந்தைகளுக்கு வேளை மருந் தாக உயிர்ச்சத்து A யினை நிர்ணயிக்கப்பட்ட இடை வெளியில் கொடுப்பது சிறந்தது என்பது எனது அபிப் பிராயம். உமிழ்ந்து கொள்ளக்கூடிய வில்லையாக 3 மாத இடைவெளியில் இதனைக் கொடுக்கலாம். உயிர்ச்சத்து A ஊட்டலுடன் சிறுவரின் எடையையும் குறிப்பெடுப்பதால் உடல் நலத்தினையும் கணிக்கலாம். வயதில் கூடிய குழந்தைகளும், சில வேளைகளில் முதிர்ந்தோரும் கூட இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட வேண்டிய அவசியம் உண்டு. "உயிர்ச்சத்து A" ஊட்டத் திட்டம் சிறிது காலத்தின் பின் – உதார ணமாக 2 ஆண்டுகளின் பின் – மீளாய்வு செய்யப் படவேண்டி நேரிடும்.

## பல் சொத்தை

சில முகாம்களில் இந்நோய் செறிந்திருக்க சிலவற்றில் இதனைக் காணமுடியாதிருந்தது. தற்போதோ (முகாம்க ளில்) முன்னரோ(இலங்கையில்) குடியிருந்த இடத்துக் குடிநீரின் "புளோரைட்" அளவில் இதன் காரணியை நாம் காணலாம். குழந்தைகளின் பாற்பற்கள் வீழ்ந்து, இரண்டாம் கட்டத்தில் முளைக்கும் பற்களைக் காப்பதி னைத் திட்டமிடுவதில் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள நிலத்தடி நீரிலுள்ள "புளோரைட்" அளவுகள் பற்றிய தகவல்கள் பெறப்பட வேண்டும். முகாம்களில் பல் சுகாதாரம் தேவையான அளவில் இல்லாதபோதும் தற்போதைய நிலையில் முன்னுரிமை வேண்டி நிற்கும் ஒரு பிரச்சினை அல்ல.

## பிரசவ இடையீடு

அழிவுகளுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் முகங் கொடுக்கும் ஒரு சமூகத்தில் குடும்பக்கட்டுப்பாடு வர வேற்பிற்குரிய விடயமாகாது. எனினும் பிறந்த குழந் தைகளின் நலன்கருதி பிரசவ இடையீடு கடைப்பிடித்தல் முக்கியமாகும். தாய்ப்பாலூட்டல் இம்முயற்சிக்கு நல்ல பலன் தரும். கர்ப்பம் தரித்தலை இது குறைப்பதால் தாய்ப்பாலூட்டல் ஊக்குவிக்கப்படல் வேண்டும். இயற் கையான காரணங்களால் முகாம்களில் கருத்தரித்தல் குறைந்தே காணப்படுவதால் குடும்பக்கட்டுப்பாட்டு விதந்துரைப்பு தேவையற்றது. எனினும் இவ்விடயம் மேலும் ஆராயப்பட வேண்டியதே.

> எம்மக்கள் வாழ்க்கைத் தரத்தில் ஒரு சிறு முன் னேற்றமாவது கொண்டுவர, தனது முயற்சி உதவும் என்ற நம்பிக்கை டாக்டர் அருளானந்தத்திடம் இருப்பதை இவ்வறிக்கை மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதுபோல மேலும் பல முயற்சிகளை எடுப்பதன் மூலமே நொந்துபோன எம்மக்களுக்குப் பலத்தினையும் நம்பிக்கையினையும் ஊட்ட முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமது வீடுகளிலேயே வதிவதற்கான உரிமை

உலகத்தின் பல பகுதிகளிலும் நடக்கும் போர்களின் விளைவுகளாலும், வறுமையினாலும் கோடிக்கணக்கான மக்கள் நாள்தோறும் அகதிகளாகவும், புலம்பெயர்ந்தும் வாழவேண்டிய நிலையில் உள்ளனர்.

இதேவேளை, இவ்வாறு மக்கள் அகதிகளாக்கப் படுவதில் தமக்கும் பங்கிருப்பதை மேற்கத்தைய நாடுகள் மறந்து, அகதிகளை அலட்சியப்படுத்தித் தமது நாடுகளுக்கு அவர்கள் வந்தடைந்துவிடாத முறையில் மனிதாபிமானமற்ற, நியாயமற்ற பல திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றன. மேற்கத்தைய நாடுகளின் இவ்வகையான நோக்குகளும் அணுகுமுறைகளும், ஐ.நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் (UNHCR) போன்ற சர்வதேச நிறுவனங்களின் அதிகாரிகளையும் பல வழிகளில் மாற்றி அமைக்கின்றன. இன்று ஐ.நா.அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் தமது ஆணைக்குப் புறம்பானதும், ஆணையின் விரிவாக்கலுமான பணிகளைக் கையேற்பதாகக் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது. உள்நாட்டிற்குள் இடம் பெயர்ந்தோரின் பாதுகாப்பும், அவர்களுக்கான உதவியும் தம் ஆணைக்குள் அடங்காது என்றே முன்னர் கூறி வந்தனர். 1992 பெப்ரவரியில், ஜெனீவாவில் ஐ.நா.அகதிகள் உயர்ஸ்தானிகரினால் கூட்டப்பட்ட அரசு சார்பற்ற தாபனங்களின் மகாநாட்டில், தமிழ் தகவல் நடுவம் உட்பட பல தாபனங்கள், அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்படும் நிலையில் உள்ளோர், பிரத்யேக அனுமதி பெற்றோர் ஆகியோரது நிலைமை என்ன என்று எழுப்பிய கேள்விகளுக்கு முற்றாகப் பதில் கூற முடியாமலிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால், 1993 மார்ச் மாதத்தில் உயர்ஸ்தானிகர் திருமதி.சாடாகோ ஒகாடா ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத் தொடரில், நாம் முன்னர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் தோரணையில் அறிக்கை ஒன்றினை விடுத்திருக்கின்றார். இப்பதில் அகதிகளுக்கும் அகதிகள் நலன் பேணும் தாபனங்களுக்கும், சட்டத்தரணிகளுக்கும் முக்கியமானதாகையால், ஏப்ரில் 1993 Refugees இதழில் வெளியான அவ்வறிக்கையின் தமிழாக்கத்தை, இங்கு பிரசுரிக்கின்றோம்.

"மனித உரிமை என்ற விடயமும் அகதிகளின் இன்னல்களும் ஒன்றோடொன்று தொடர்புடையதால் ஒன்றினைப் பற்றிப் பேசுமிடத்து மற்றையதைப் பற்றிக் குறிப்பிடுவதைத் தவிர்க்க முடியாது. அகதிகளின் எண்ணிக்கை பெருகுவதற்கு மனித உரிமை மீறல்கள் முக்கிய காரணியாகும். சுயவிருப்பில் அகதிகள் தம் நாடு திரும்புவதற்கும் மனித உரிமை மீறல்கள் பெரும் தடையாக உள்ளன.

மேலும் கூறுவதானால் அகதிகளாக மக்கள் மாறுவதற்கான சூழலைத் தடுப்பதற்கான சிறந்த வழி, மனித உரிமைப் பாதுகாப்பே ஆகும். தஞ்சம் அடைந்த நாட்டில் அகதிகளின் பாதுகாப்பிற்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளிப்பது ஒரு முக்கிய கூறாகும். மனித உரிமைகள் கூடிய தரத்தில் பேணப்படுதல் அகதிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மையமாக அமையும். இந்நிலை அகதிகள் பாதுகாப்பாக தம் நாட்டிற்குத் திரும்பும் சூழலை ஏற்படுத்தும்.

அகதிகள் போலவே, இடம்பெயர்ந்து நாட்டினுள் இருப்போரும் எளிதில் பெரும் பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய சூழ்நிலையில் உள்ளவர்களே. அவர்களும் தமது பாதுகாப்பிற்கும், நிவாரணத்திற்கும் தம் பிரச்சினைத் தீர்விற்கும் உதவி வேண்டி நிற்கின்றனர். ஐ.நா.அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்திற்கு உள்நாட்டில் இடம் பெயர்ந் தோர் தொடர்பாகச் செயற்பட, பொது அதிகாரம் இல்லை. அப்படியென்றாலும் அவர்கள் தம் நிலையும் அகதிகள் நிலையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய காரணத்தால், அவர்கள் சார்பிலும் பொறுப்புகளை ஏற்கும் நிலை ஐ.நா.உயர்ஸ்தானிகராலயத்திற்குப் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, மனித நேய அடிப்படையிலான உதவிகள் அவர்களின் பாதுகாப்புத் தேவைகளுடன் எழும்போது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பெரும்பாலும் தமது அரசிடமிருந்து உருப்படியான பாதுகாப்பைப் பெற முடியாது. நாட்டின் சில பகுதிகளில் அரசு தனது கட்டுப்பாட்டினை இழந்திருத்தல், இந்நிலைக்கு ஒரு காரணம். மற்றைய காரணம் இடம் பெயர்ந்தோரை, தமக்கெதிரான அச்சுறுத்தலாகக் கருதும் அரசு அவர்களுக்கெதிரான உரிமை மீறல்களை ஆதரிப்பதோ அல்லது காணாதிருப்பதோ ஆகும். தமது நாட்டினை விட்டகலாத நிலையில் அகதிகளுக்கான சர்வதேசப் பாதுகாப்பிற்கு அவர்கள் அருகதையற்றவர்கள். ஆனால் இடம் பெயர்ந்தோரின் பாதுகாப்பிற்கு சில வழிமுறைகள் அவசியமாகும். மனித நேய சட்டங்களுக்கும் மனித உரிமைகளுக்குமான பொது ஏற்பாடுகள் மூலமும் சந்தர்ப்பத்திற்கேற்ப செயற்பாட்டு ஒழுங்குகள் மூலமும் பாதுகாப்பினை இவர்களுக்கு வழங்க வேண்டும். இடம் பெயர்ந்த மக்கள் விடயத்தில் மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்டங்களின் (norms) வரை முறைகளை எவ்வாறு கடைப்பிடிக்கச் செய்யலாம் என் பது சர்வதேச சமூகம் எதிர்நோக்கும் முக்கிய சவால் களில் ஒன்றாகும்.

பெரும் எண்ணிக்கையில் அகதிகள் புலம்பெயர்வதையும், உள்நாட்டில் மக்கள் இடம்பெயர்வதையும் தடுப்பதற்கு, மக்கள் தமது வீடுகளில் பாதுகாப்பாக வதிவதற்கான உரிமையைப் பேணுவது அவசியமாகும். துரதிஷ்டவசமாக ஒரு மக்கள் கூட்டத்தினையே தமது வீடுகளிலிருந்தும், நாட்டிலிருந்தும் வெளியேற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோக்குடன் திட்டமிட்ட மனித உரிமை மீறல்கள் சந்தர்ப்பங்கள் பல நிகழ்ந்துள்ளன; நிகழ்கின்றன. முன்னைய யூகோஸ்லாவிய நாடு இதற்கான சிறந்ததோர் எடுத்துக்காட்டு. அங்கு அகதிகளுக்கும் இடம்பெயர்ந்தோருக்கும் மட்டுமல்லாது, ராணுவத் தாக்குதல் அல்லது இனச்சுத்திகரிப்பு மூலம் வெளியேற்றப்படும் ஆபத்தினை எதிர்நோக்கும் மக்களுக்கும் ஐ.நா.அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் தற்போது உதவி வருகின்றது. கொலை, சித்திரவதை, அங்கங்களை வெட்டிச் சிதைத்தல், கற்பழிப்பு என்பவற்றை உள்ளடக்கிய அட்டூழியங்கள் மூலம் இனச்சுத்திகரிப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வதிவதற்கான மனித உரிமைக்கெதிராக செயற்படுத்தப்படும் பல வழிகளில் ஒன்றே இவ் இனச் சுத்திகரிப்பாகும்.

"வதிவதற்கான உரிமை" என்று நான் கூறும்போது இரு விடயங்களைக் கோடிட்டுக் காட்ட முனைகின்றேன்.

(1) நாடு கடத்தப்படும் நிலையினை மக்களுக்கு ஏற்படுத்தாத தனிநபர் அடிப்படை உரிமைப் பாதுகாப்பு.

(2) பெரும் எண்ணிக்கையில் அகதிகளை உருவாக்கும் சூழலை ஏற்படுத்தும் நிலையினைக் கையாள்வதற்கு உதவக்கூடிய மனித உரிமைகளின் ஒரு அம்சத்தினை அபிவிருத்தி செய்தல்.

தனது நாட்டிலிருந்து விலகவும், மீண்டும் சென்றடையவும் 'வதிவதற்கான உரிமையில்' இடமுண்டு. தனது நாட்டில் விரும்பிய இடத்தில் வதிவதற்கும், இடம் மாறுவதற்கும் தனிநபருக்கு இடம் கொடுக்கும் உரிமை வதிவதற்கான உரிமையின் எளிய வடிவமாகும்.சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 9 ஆவது சரத்துப்படி எவரையும் கட்டாய நாடு கடத்தலுக்குட்படுத்த முடியாது. இது மற்றைய அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடையது. ஏனென்றால் பலவந்தமாக வதிவிடங்களிலிருந்து வெளியேற்றப்படுவோர் உயிர் வாழ்வு, சுதந்திரம், தனிநபர் பாதுகாப்பு, பாகுபாடின்மை, சித்திரவதை கீழ்த்தர நடத்தைகளுக்கு ஆளாகாமை, குடும்ப வாழ்க்கை ஆகிய உரிமைகளையும் இழக்கும் நிலைமைக்கும் தள்ளப்படுகின்றனர்.

அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் என்ற முறையில் அகதியாகாமைக்கான உரிமையை வலியுறுத்துகின்றேன். இது ஏனென்றால் தஞ்சமடைந்த நாடுகளின் உதவியுடன் UNHCR அகதிகளுக்கு வழங்கும் சர்வதேசப் பாதுகாப்பானது, தமது நாட்டில் தமது அரசுகள் வழங்க வேண்டிய பாதுகாப்பிற்கு ஒரு போதும் மாற்று ஈடாக அமையாது என்பதாலாகும். தஞ்சமளிக்கும் நாடுகளின் பெருந்தன்மை தாயக இழப்பிற்கும், நாடு விட்டேகியதாலான மன உளைச்சலுக்கும் என்றும் ஈடாக மாட்டாது. இன்று நாடுகளில் மக்கள் பிரிவுகளுக்கிடையில் கூரிய பதட்டங்கள் நிலவுகின்றன. அதேபோல், இன்னொரு பிரிவினருடன் பகிர்ந்து கொள்ளும் நிலங்களிலிருந்து ஒரு பிரிவினரை வெளியேற்றும் நோக்குடைய மோதல்களுக்கான பயமுறுத்தல்களும் எங்கும் காணப்படுகின்றன. இவ்வாறான சூழலில் 'வதிவதற்கான உரிமை'யை எவ்வாறு நிலை நிறுத்தலாம் என்பது அவசரத் தேவையாகின்றது. ஏனென்றால் இது ஒன்றே மக்கள் இருக்குமிடத்திலேயே அவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றது; பாதுகாப்புத் தேடி நாட்டிலிருந்து வெளியேறா நிலையையும் உறுதிப்படுத்துகின்றது.

ஆகவே மனித உரிமை நிலைமைகளை அவதானிக்குமிடத்து 'வதிவதற்கான உரிமை'என்ற அடிப்படையில் நோக்குமாறு உங்களை வேண்டுகிறேன். பலவந்தமாக மக்கள் இடம் பெயர்க்கப்படுவதற்கான அடிப்படைக் காரணங்களையிட்டு பயனளிக்கத்தக்க வகையில் சர்வதேச சமூகம் செயற்படாத வரை, பெரும் எண்ணிக்கையில் அகதிகள் வருகையைத் தவிர்க்க முடியாது என நான் திடமாக நம்புவதால்தான் 'வதிவதற்கான உரிமையை' நான் முக்கியம் எனக் கருதுகிறேன். □

# விசாரம்

ஜேர்மனியின் 1949ஆம் ஆண்டின் யாப்பின்படி, எந்தவொரு வெளிநாட்டவரும் ஜேர்மனியில் தஞ்சம் கோரலாம். மேலும் அவரது தஞ்ச விண்ணப்பம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும்வரை, அது எத்தனை ஆண்டுகளானாலும், அவர் அங்கு தங்கியிருக்கலாம். ஹிட்லரின் ஆட்சியின்போது எட்டு லட்சத்துக்கும் அதிகமான ஜேர்மனியர்களுக்கு வெளிநாடுளில் தஞ்சம் அளிக்கப்பட்டமையைக் கருத்திற்கொண்டே, சட்டத்தில் இவ்வேற்பாட்டுக்கு இடமளிக்கப்பட்டது.

ஆனால், கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக, ஜேர்மனிக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கைப் பெருக்கம் காரணமாக, அகதிகளின் வருகை குறித்த எதிர்ப்பு வளர்ந்து வந்திருக்கிறது. அதன் விளைவு, கடந்த ஆண்டில் தீவிரவாதிகளின் வன்செயல்களுக்கு அகதிகள் பலர் ஆளானார்கள் என்பது பலரும் அறிந்ததே.

இவற்றிற்கெல்லாம் பரிகாரமாக, ஜேர்மன் பாராளுமன்றம் மே மாதம் 26ஆம் திகதி அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டமூலம் ஒன்றினை, 13 மணித்தியால விவாதத்தின் பின்னர் 521 – 132 என்ற வாக்குகள் அடிப்படையில் அங்கீகரித்தது. யூலை முதலாம் திகதி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழ் அகதிகளே இப்புதிய சட்டத்தின் பாதிப்புக்குப் பெருமளவில் ஆளாவார்கள் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

இப்புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, பத்தாயிரத்திற்கும் அதிகமான அகதிகள், அகதித்தாபனப் பிரதிநிதிகள், மதகுருமார், அரசுசார்பற்ற தாபனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் ஆதாரவாளர்களும் பாராளுமன்றத்திற்கு வெளியே பலத்த எதிர்ப்பைத் தெரிவித்த வண்ணம் இருந்தார்கள்.

ஆர்ப்பாட்டகாரர்களைக் கட்டுப்படுத்த, முட்கம்பி வேலிகளை அமைத்து, 4,000 பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆர்ப்பாட்டம் காரணமாக படகுகள் மூலமும் ஹெலிகொப்டர் மூலமும் பாராளுமன்றத்திற்குச் செல்ல நேர்ந்தது.

இப்புதிய சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர் பலர், பாராளுமன்ற விவாதத்தின்போது, "இன்று ஜனநாயகத்திற்கு ஒரு கரிநாள்" என்று குறிப்பிட்டனர். அரசின் இச்சட்டம் 'ஐரோப்பா வெள்ளையருக்கே' என்ற 'ஐரோப்பியக் கோட்டை' உருவாக்கத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

## ஐரோப்பியக் கோட்டை: ஜேர்மனியின் பங்களிப்பு

ஜேர்மனி மட்டுமல்லாது, பிரான்ஸ், சுவிற்சலாந்து மற்றும் மேற்குநாடுகள் அனைத்திலுமே அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டங்கள் உருவாகி வருகின்றன. இந்நிலையில் தஞ்சம் கோரும் நோக்கில் வந்தடையும் அகதிகளின் நிலை எவ்வாறு இருக்கும்! ஜேர்மனியின் புதிய சட்டம் அங்கீகரிக்கப்பட்ட தினமான மே 26ஆம் திகதி பிராங்பேர்ட் விமான நிலையத்தில் தாம் கண்ட காட்சியை, பத்திரிகையாளரான டேவிட் கவ், மே 27ஆம் திகதி *The Guardian* பத்திரிகையில் விபரித்திருந்தார். கவிதை நயமிக்க அக்கட்டுரை ஓர் ஓவியம்போற் காட்சி தருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிராங்பேர்ட் விமான நிலையத்தில், நேரில் கண்ட டேவிட் கவ்வின் அறிக்கை

'ஐரோப்பியக் கோட்டை' நாளடைவில் இப்படித் தான் காட்சிதரும். பிரதான விமான இறங்கு தளங் களின் எல்லைக்கப்பாலுள்ள, தனிமைப்படுத்தப்பட்ட ஒரு தற்காலிக இடைத்தரிப்புக் காப்பிடம். அங்கு கொண்டு வரப்பட்டுத்தான், மூன்றாம் உலக நாடுகளிலி ருந்து வந்து, திக்குத் தெரியாது திகைத்து நிற்கும் தஞ் சம் கோருவோரும் அகதிகளும் வந்ததும் வராததுமாக, அவர்களின் தலைவிதி உடனடியாகத் தீர்மானிக்கப்பட்டு, அவரவர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

நேற்று C 183 நிலையத்திற்கு வெளியே அழுக்கடைந்த படுக்கை விரிப்புக்களும், கம்பளிகளும் சலவை செய்ய எடுத்துச் செல்லப்படுவதற்காகக் குவிந்து கிடந்தன. கைவிடப்பட்ட பொதி வண்டியொன்றில் அமர்ந்தபடி, இலங்கைத் தமிழர் ஒருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். சிந்தனை முழுதும் அவரது பிரச்சி னைகளில் மூழ்கியிருந்தது. அவருக்கு அப்பால் சில யார் தூரத்தில் கூட்டாட்சி எல்லைப் பொலிசாரின் (BGS) கவச வாகனங்கள் நின்றன.

நிலையத்தின் உள்ளே, Volker Hohr என்ற அதிகாரியின் கழுகுப்பார்வையின் கீழ், கூட்டாட்சி எல்லைப் பொலி சார், கடைசியாக வந்தடைந்த தஞ்சம் கோருவோர் 79 பேர்களின் வாழ்க்கைக் கதைகளையும் பயணக் கதைகளையும், மொழிபெயர்ப்பாளர்களின் துணை யுடனும், கொம்பியூட்டரில் பதிவுசெய்யப்பட்டுள்ள வினாக்கள் மூலமும் ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

அகதிகளில் பெரும்பாலோர், குழந்தைகளுடன் கூடிய பெண்கள். அனைவரும், எவ்வித உணர்வுகளுமற்ற முகபாவங்களுடன் தலையைத் தொங்கவிட்டபடி, அந்நிய சட்ட திட்டங்களுக்கும் வெளிநாட்டு கலாசாரத்திற்கும் முகங்கொடுப்பதனால் ஏற்படும் துயரப் பிடியினை எதிர்கொள்வதில் ஈடுபட்டிருந்தனர். அதேவேளை கூட் டாட்சி எல்லைப் பொலிசார் பொறுமையுடனும், பரிவுடனும் காத்து நின்றனர்.

அருகே நடைபாதையில், கலகலப்பான ஈரானியர் ஒருவர் எம்மைப் பார்த்து, "இங்கே நன்றாக இருக் கிறது, அல்லவா?" என்றார். அங்கேயிருந்த இரண்டு உறங்கு கூடங்களில் ஒன்றில், 40 படுக்கைகள் வரை இருந்தன. அவற்றில் கானா நாட்டினரும் லைபீரியா நாட்டினரும் இருந்தனர். தாம் ஏன், எப்படி அங்கு வந் தோம் என்பதற்கு விளக்கம் தர அவர்களால் முடிய வில்லை. ஆயினும், முற்றாகச் சோர்வடைந்த நிலையில் சிவந்த கண்களுடன் கூடிய லைபீரிய நாட்டு இளைஞர் ஒருவர் மட்டும் தமது நிலையை எடுத்துக் கூறினார். தமது நாட்டின் உள்நாட்டுப் போரில் தமது விருப் பத்திற்கு மாறாக எவ்வாறு ஈடுபட்டார், எவ்வாறு கை தானார் என்றும் காட்டுக்குள் தப்பியோடி, பின் எவ் வாறு வெள்ளைக்காரப் பாதிரியார் ஒருவர் தம்மைக் காப்பாற்றினார் என்றும் அவர் சொன்னார். பின்னர் எப்படியோ விமான நிலையம் ஒன்றினை அடைந்து ஜேர்மனிக்கு வந்தார் என்பதையும் அவர் கூறினார்.

"நான் எங்கே போக விரும்புகிறேன் என்று அவர் கள் கேட்டார்கள். எனக்குத் தெரியாது, எனக்கு இனி மேல் ஆபத்து வராத எந்த இடமானாலும் சரி என் றேன். விமானப் பயணத்தின் முதற் தரிப்பிடம் பிராங் போர்ட். அங்கே சேர்ந்ததும் எனது பத்திரங்களைக் கேட்டார்கள். என்னிடம் எதுவும் இருக்கவில்லை. இங்கே நான் மூன்று நாட்களாக இருக்கிறேன். என்னை நன்றாகக் கவனிக்கிறார்கள். கடவுள் அவர்களுக்கு அரு ளுவான்" என்று மேலும் கூறினார்.

வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வேலை தேடி வந்தவர்கள் என்றும், மனிதரைக் கடத்தல் செய்யும் மோசடிக் கும்பல்களாலேயே அவர்கள் கொண்டு வரப் படுகிறார்கள் என்றும் Hohr சொன்னார்.

இதுதான் தற்காலத்து "அடிமை வியாபாரம்" என் றார் Peter Holzem என்ற பிரதம இன்ஸ்பெக்ரர். ஒவ்வொருவரும் குறைந்தது 5000 டொலர் கொடுத்து வந்துள்ளனர்; சிலர் 30,000 டொலர்கூடக் கொடுத்து வந்துள்ளார்கள் என்றார் அவர். கடந்த ஆண்டு பிராங்போர்ட்டின் ஊடாக வந்த 6719 தஞ்சம் கோரிய வர்களில் 90 வீதத்திற்கு மேற்பட்டோர் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கும்பல்களால் கொண்டு வரப்பட்டவர்களே என்றார் அவர்.

யூலை மாதம் முதலாம் திகதி யாப்புத் திருத்தம் நடைமுறைக்கு வந்ததும் அவர்கள் நடைமுறைப்ப டுத்தவுள்ள புதிய செயல்முறைகள் பற்றிக் கூற, திரு. Holzem உம் அவரது சக அதிகாரிகளும் தயங் கினர். ஆனால் ஏராளமான அகதிகளின் நிலை பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டி வரும் என்பதையும் அவர் கள் ஒவ்வொருவரதும் தலைவிதியினைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு தமக்கு உண்டு என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

பாதுகாப்பானதொரு மூன்றாவது நாட்டின் தரை வழியாக ஜேர்மனிக்கு வருவோரை, அந்த நாட்டிற்கே உடன் திருப்பி அனுப்புவதற்குப் புதிய விதிகள் வழி வகுப்பதால், அகதிகள் ஜேர்மனிக்கு நேரடியாகவே கடல் வழி அல்லது விமான மூலம் வருவதை நிர்ப் பந்திக்கும். பிரதான சர்வதேச விமான நிலையமான பிராங்போர்ட்டில் பெரும்பகுதி அகதிகள் பரிசீலனைக் குள்ளாவர்.

அத்தகையோரின் விடயங்கள் C 183 நிலையம் போன்ற இடைத்தரிப்பிடங்களில் துரிதமாகக் கையா ளப்படும்.

புதிய விதிகள், கடவுச் சீட்டின்றி அல்லது போலி ஆவணங்களுடன் வருவோரைக் குறிப்பாகப் பாதிக்கும். Holzem குழுவின் கருத்துப்படி, கடந்த ஆண்டில் வந்த 6719 பேர்களில் 4400 பேர் ஆவணங்கள் எவையும் இன்றி வந்தனர்; 1829 பேர் கடத்தல் குழுவினரால் தரப் பட்ட போலிக் கடவுச்சீட்டுடன் வந்தனர்.

தமது எதிர்காலக் கடமைகள் மிகுந்த பொறுப்பு வாய்ந்தனவாயும் துன்பம் தருவதாயுமிருக்குமென மூத்த B.G.S. அதிகாரிகள் தெரிவித்தனர். வரலாறு கார ணமாக, அகதிகளைப் பொறுத்தவரையில் பெரிய பளுவை ஏற்க வேண்டிய கடமை ஜேர்மனிக்கு உண்டு என்பதை அந்தரங்கத்தில் அவர்கள் ஒப்புக்கொள்கின் றார்கள்.

ஜேர்மனியில் தஞ்சம் பெறுவதற்கான உரிமையை, புதிய சட்டங்கள் அழித்து விடும் என்பதை உறுதியாக நம்புகிறார் திரு. Petasch. Gudrun Petasch, கிறிஸ்தவ தேவாலய ஆதரவில் இயங்கும், அகதிகளுக்கான சமூக சேவைகள் ஸ்தாபனத்தின் தலைவர் ஆவார்.

"அரசியல் காரணங்களுக்காக, ஆய்க்கினை அநி யாயங்களுக்குத் தாம் உட்படுத்தப்பட்டார்கள் என்பதை நிருபிக்க முடியாது போனாலும், தகுந்த காரணமின்றி எவரும் தம் நாட்டை விட்டு நீங்குவதில்லை. ஆனால், இப்புதிய சட்டம், மிகவும் வன்மையான ஆய்க்கினை அநியாயங்களுக்கு உட்படுத்தப்பட்டவர்களையே பெரி தும் பாதிக்கும் என்றும், ஈற்றில் எவருமே இந்நாட்டிற்கு வரமாட்டார்கள்" என்றார் அவர். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பிய சமூகத்தின் தேசியக் கொள்கைகளை ஒத்திசைவாக்குதலால் ஏற்படும் விளைவுகள்

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 16(3) ஆம் விதி பின்வருமாறு:

"குடும்பமே சமூகத்தின் இயற்கையானதும் அடிப்படையானதும் ஆன அலகு ஆகும்; மேலும் அது சமூகத்தாலும் அரசாங்கத்தாலும் பாதுகாப்புப் பெறுவதற்கு உரித்துடையது."

பொருளியல் சமூக கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையும், "இயன்றளவு விரிவான பாதுகாப்பும் உதவியும் குடும்பத்துக்கு அளிக்கப்படுதல் வேண்டும்" என்கிறது.

ஆனால் அரசாங்க அதிகாரிகள், அகதிக் குடும்பங்களை வலிந்து பிரித்து வைத்திருக்கிறார்கள் என்பதே நடைமுறை உண்மையாகும். தமது உற்றார் உறவினர்களைக் காண இயலாதவாறு பல்லாண்டுகளாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளுக்கும் புலம் பெயர்வோர்களுக்கும் கூடுதலான துன்பங்களையும் ஏக்கங்களையும் ஏற்படுத்தவிருக்கும் புதிய திருப்பங்கள் பற்றி, அகதிகளும் அகதிகளுக்கு உதவும் ஏனையோரும் அறிந்திருத்தல் அவசியம்.

பிள்ளைகளிடமிருந்து பிரிக்கப்பட்டு வாழும் பெற்றோரின் மனச் சஞ்சலத்தைப் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழும் பெற்றோர் விளங்குவது கடினம். துணைவியையோ துணைவனையோ பிரிந்து வாழும் ஒருவரின் மன வேதனையை தம்பதிகளாய் வாழ்வோர் கற்பனை செய்து பார்ப்பது கடினமே. மேற்கு நாடுகளில் உள்ள "பாதுகாப்பான இடங்களில்" வாழும் குடும்பங்களைப் பிரிந்து வாழும் ஆயிரக்கணக்கானோரின் துன்ப வேதனை தொடர்கதையாகவே முடிவின்றி நீள்கிறது. ஆயிரக்கணக்கான தமிழர்கள், தமது குடும்பங்களைப் பிரிந்து, உலகெங்கும் சிதறி வாழ்கிறார்கள். பாதுகாப்பான இடங்களுக்கு இட்டுச் செல்வதற்கான விமானப் பயணங்களை ஏற்படுத்தும் முகவர்கள் ஏமாற்றி வருகின்றார்கள் என்ற கதையும் நமது காதுகளுக்கு எட்டுகின்றது. ஒரு பிள்ளை ஒரு நாட்டிற்கும், இன்னொரு பிள்ளை மற்றொரு நாட்டிற்கும், தாயொரு நாட்டிற்கும், தந்தை பிறிதொரு நாட்டிற்கும் ஆகத் திக்குத்திக்காக அனுப்பப்பட்ட பரிதாபக் கதைகளையும் நாம் கேள்விப்படுகின்றோம். தாயோ தந்தையோ இன்றித் தனியாக அனுப்பப்பட்டுச் சேர்ந்த நாட்டின் சமூகப் பாதுகாப்பிடம் ஒப்படைக்கப்பட்ட பெருந்தொகையான தமிழ்ச் சிறார்கள் தம் இனத்தைச் சேர்ந்த சமூக அமைப்புக்களின் தயவின்றித் தவிப்பது பற்றியும் நாம் கேள்விப்படுகின்றோம். குடும்பத்திலிருந்து பிரிந்து வாழும் தமிழர் பலர் மன நோயாளர்களாக மாறியுள்ளார்கள். பெற்றோரின் கவனிப்பின்றி அந்நியச் சூழலில் தனியாக விடப்பட்ட தமிழ் அகதிகள் பலர் திருட்டு, சண்டை போன்ற சிறிய குற்றங்களைப் புரிவதாகவும் கேள்விப்படுகின்றோம். நலமான ஆரோக்கியமான சமூகம் உருவாவதற்கு பெற்றோரின் அரவணைப்பு எவ்வளவு அவசியம் என்பது மேற்படி நிகழ்வுகளிலிருந்து தெளிவாகின்றது.

சமூகத்தில் உள்ள நாங்கள், பிரிவுத் துயரின் விளைவுகளை மற்றோர்க்கும் உணர்த்துவதோடு, அத்தகைய பிரிவினை ஏற்படுத்தும் ஒழுங்கு விதிகளுக்கு எதிராக கூக்குரல் எழுப்புவதும் அவசியம். பாதிக்கப்படும் சமூகத்தினர் எதிர்த்து ஆர்ப்பரித்தாலொழிய மாற்றம் எதுவும் நிகழாது. இத்தகைய ஆர்ப்பரிப்பு 1989 யூன் இல் வெற்றி தந்தது. விதிவிலக்கான அனுமதி வழங்கப்பட்டோரின் நிலையை பிரித்தானிய அதிகாரிகள் மீளாய்வு செய்ய எண்ணியபோது, அதற்கெதிராக தமிழர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததும், அரசாங்கம் தனது திட்டத்தை மாற்றியது. தமிழ்ச் சமூக அமைப்புகளும், ஏனைய அகதிகள் அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்ததும், 'விதிவிலக்கான அனுமதி பெற்றுள்ள தமிழர் பற்றிய விசேட கொள்கை தப்பானது' என்று உள்துறை அமைச்சு ஒத்துக்கொண்டு, தமது நிலையை மீளாய்வு செய்ய முடிவு செய்தது. அந்த வேளையில் உள்துறை அமைச்சராயிருந்த Timorthy Renton அவர்கள் விதி விலக்கான அனுமதி பெற்றுள்ள தமிழர்கள், ஏனைய அகதிகள் சமூகத்தைப் போல, நான்கு ஆண்டுகள் கழிந்ததும் தமது குடும்பத்தினரை அழைக்க விண்ணப்பிக்கலாம் என்று உடன்பட்டார். அதற்கு முன்னர் தமிழ் அகதிகளைப் பொறுத்தளவில், ஏழு வருடங்கள் கழிய வேண்டும் என்ற நிலையிருந்தது. மேற்படி மாற்றம் சிறிய சலுகையே எனினும் தமிழரைப் பொறுத்த வரையில் அது முக்கியமானதாகும். இதில் அதிர்ச்சி தரும் விஷயம் என்னவென்றால் "பிரித்தானியாவில் தங்குவதற்கான விதிவிலக்கான அனுமதியின் கீழ் தமிழரை விசேடமான ஒரு வகைப் பிரிவில் வைத்திருப்பதற்கு அவர்கள் கூறிய காரணங்கள் ஆகும்".

அதிகாரிகளின் கருத்துப்படி, குடும்பங்கள் ஒன்று சேரலாம் என்று அனுமதித்தல் அது அவர்கள் சுயவிருப்பின் பேரில் தம் நாட்டுக்குத் திரும்பிப் போதலை ஊக்கமளிக்காது என்பதே. இது அகதிச் சமூகத்தினருக்கு முக்கியமானதொரு சமிக்ஞையாகும். அரசாங்கத்தின் அத்தகைய சிந்தனைகளின் வெளிப்பாடுகள், தற்போது நடைமுறை உண்மையாகி வருவதை, குடும்ப ஒன்று சேர்வு பற்றிய ஐரோப்பிய சமூகங்களின் தேசியக் கொள்கைகளை ஒத்திசைவாக்கலில் மெய்ப்பித்துள்ளது.

## குடும்ப ஒன்று சேர்வு

1993 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் தேதி கொப்பனாகனில் கூடிய குடிவரவுக்குப் பொறுப்பான ஐரோப்பிய சமூக அங்கத்துவ நாடுகளின் அமைச்சர்கள், குடும்ப ஒன்று சேர்வு பற்றிய தேசியக் கொள்கைகளை ஒத்திசைவாக்குதல் தொடர்பில் முக்கியமானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளனர். ஆயினும், 1951 ஆம் ஆண்டின் ஐ.நா. உடன்படிக்கையின் கீழ் அகதி அந்தஸ்து நிலை வழங்கப்பட்டோரின் குடும்ப ஒன்று சேர்வு பற்றிய நிலையைக் கவனத்திற்கு எடுக்கவில்லை. மாறாக, ஐ.நா.உடன்படிக்கையின் கீழான அகதிகளின் குடும்பங்கள் பற்றிய கொள்கைகள் ஒத்திசைவாக்கல் (harmonization) மேலும் ஆராயப்பட்டு, பின்னர் அவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அநுமதி தொடர்பான கொள்கைகளை வகுக்கும்பொழுது முடிவுக்கு வரலாம், என அமைச்சர்கள் உடன்பட்டுள்ளனர்.

குடிவரவுக்குப் பொறுப்பான அமைச்சர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1991 டிசம்பரில் நெதர்லாந்து தலைமையின் முடிவில் ஐரோப்பிய அவையின் இசைவு பெற்ற குடிவரவுக் கொள்கைகள் ஒத்திசைவாக்கத்தில், குடும்பங்கள் ஒன்று சேர்தல் பற்றிய நாடுகளின் தேசியக் கொள்கைகளின் ஒத்திசைவாக்கல் முன்னுரிமைக்குரிய விடயமாகச் சேர்க்கப்பட்டிருந்தது. அது தொடர்பான வேலை போர்த்துக்கீசிய, ஐக்கிய ராச்சிய, டென்மார்க் தலைமையின் போதும் தொடர்ந்தது.

குடும்பங்கள் ஒன்று சேர்தல் என்ற விடயம் ஏற் கனவே, ஐரோப்பிய சமூகத்தின் அங்கத்துவ நாடுகள் பலவற்றினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளிலும், அந்நாடுகளில் தேசிய சட்ட விதி களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐ.நா.உடன்படிக்கையின் கீழ் அகதிகளாகக் கருதப் படாதவர்கள், தற்காலிக குடிவரவு அந்தஸ்துப் பெற் றவர்கள், விண்ணப்ப முடிவு தெரியாதிருப்பவர்கள் ஆகிய பெரும் எண்ணிக்கையிலானோரை ஐரோப்பிய சமூகத்தின் ஒரு சீர்மைப் படுத்தும் கொள்கைகள் பாதிக் கும் என்று அகதித் தாபனங்களும் குடிவருவோருக்கான அமைப்புக்களும் அஞ்சுகின்றன. அகதிகளும், குடியமர் வதில் அவர்களுக்கு உதவுவோரும் இம்மாற்றங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். நாம் இன்னமும் தொலை தூரம் செல்ல வேண்டியவர்கள். ஞாயமான ஒரு குறிக் கோளுக்காகப் போராடும் சமூகம் ஒன்றின் உறுப்பினர் என்ற வகையில் நாம், பாராளுமன்ற, ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களைத் தூண்டிக் கொண்டே யிருக்க வேண்டும். அகதிகளின் பிரச்சனை அவர்களின் நிகழ்ச்சி நிரலில் முன்னணியில் நிற்பதையும் மனிதாபிமான அடிப்படையில் செயற்படுதலையும் உறுதிப்படுத்தல் நமது கடமை.

உறுப்பு நாடுகளின் எல்லைகளுக்குள் சட்டப்படி வதி யும் குடிவந்தோர் உள்ளூர் மக்களோடு வெற்றிகரமாக ஒருங்கிணைய வேண்டுமானால், அந்த நாடுகளுக்குள் நுழையும் போக்குக் கட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்று கொப்பநாகனில் யூன் 1 இல் நடைபெற்ற அப் போதைக்கான குழுவின் குடிவருவோர் பற்றிய கூட்டத்தில், அமைச்சர்கள் வாதாடியுள்ளனர். பிரித்தானிய பாராளு மன்ற உறுப்பினரான வின்ஸ்ரன் சேர்ச்சில் அவர்களும் இதே வாதத்தை அண்மையில் பிரித்தானியப் பாராளு மன்றத்தில் முன்வைத்துள்ளார்.

தத்தமது நாடுகளில் வாழும் குடிவந்தோர் தமது குடும்பத்தோடு ஒன்று சேர்தல் தொடர்பிலான உறுப் புநாடுகளின் தேசியக் கொள்கைகள், ஒத்துக்கொள்ளப்பட்ட பொது நெறிகளால் ஆளப்படும் என்றும், அவரவரின் தேசியச் சட்டங்களைத் திருத்தும்போது மேற்படி நெறி கள் கருத்திலெடுக்கப்படுதல் வேண்டும் என்றும் அமைச் சர்கள் உடன்பட்டுள்ளார்கள். 1995 ஜனவரி முதலாம் திகதி அளவில் மேற்கண்டவாறு ஒத்துக்கொள்ளப்பட்ட நெறிகள் தேசியச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருத்தலை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் மேலும் உடன்பட்டிருக்கிறார்கள்.

அத்தீர்மானம் மேலும் கூறுவதாவது:

சுதந்திரமான மக்கள் நடமாட்ட உரிமையைப் பிர யோகிக்கின்ற உறுப்புநாட்டுச் சுதேசிகளின் குடும்ப உறுப்பினர்களை உறுப்புநாடுகளுக்குள் சேர்த்துக் கொள் ளுதல் தொடர்பிலான கொள்கையானது ஐரோப்பியச் சமூகச் சட்டத்தினால் ஆளப்படும் என்றும் அத்தீர்மானம், ஐரோப்பியப் பொருளாதாரப் பிரதேசம் பற்றிய உடன் படிக்கை நடைமுறைக்கு வந்ததும் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வாழ்க்கைத் துணை சம்பந்தப்பட்ட நிபந்தனைகள்

ஒருவரது வாழ்க்கைத் துணை உறுப்பு நாடொன்றுக்குள் நுழைந்து அங்கே வதிய வேண்டும் என்ற ஒரே காரணத் திற்காகவோ அல்லது பிரதான காரணத்திற்காகவோ திருமணம் ஒன்று ஒப்பந்தம் செய்யப்பட்டதா என்பதை நிர்ணயிப்பதற்கும் நாட்டுக்குள் நுழைந்து வதிவதற்கான அனுமதியை மறுப்பதற்குமான உரிமை உறுப்பு நாடுகளுக்கு உண்டு என்று அமைச்சர்கள் தீர்மானம் எடுத்தனர். அவ்வாறான தீர்மானத்தை எடுக்கும்போது உபயோகிக்கும் கட்டளைகள் எவை என்பது தெளிவாகத் தெரியவில்லை. இது சமூகப் பணி புரிவோரை மேலும் கவலைக்குள்ளாக்குகிறது.

## பிள்ளைகள்

அமைச்சர்கள் மேலும் சில தீர்மானங்களை எடுத் துள்ளனர்:

(அ) பிள்ளை ஒருவரை அனுமதிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை உறுப்பு நாடுகளிட மிருக்கும்.

(ஆ) பிள்ளையின் தாய்நாட்டின் தகுதி வாய்ந்த நிரு வாக அதிகாரியினால் அல்லது நீதிமன்றத்தினால் எடுக் கப்பட்டதும் வதியப் போகும் உறுப்புநாட்டினால் அங் கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் ஆன ஒரு முடிவுக்கிணங்க ஒரு பிள்ளை தத்தெடுக்கப்படுகின்றவிடத்து அத்தகைய பிள்ளையை ஏற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையும் உறுப்பு நாடுகளுக்கு உண்டு.

(இ) குடும்ப ஒன்று சேர்வு நோக்கத்திற்காக அனு மதிக்கப்படுவதற்கு ஒரு பிள்ளை தகுதிபெற வேண் டுமானால் அந்தப் பிள்ளை 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளையாகவும் திருமணமாகாததாகவும் அல்லது தனிப்பட்ட குடித்தனம் நடத்தாததாகவும் அல் லது சுதந்திரமாக வாழாதவராகவும் இருக்க வேண்டும் என உறுப்புநாடுகள் இசைந்துள்ளன.

(ஈ) பிள்ளையொன்றை உறுப்பு நாட்டுக்குள் அனு மதிக்க வைத்து அங்கே வாழ்விட வசதி பெற்றுக் கொடுப்பதற்காக மட்டுமே அதனைத் தத்தெடுத்தார்களா என்பதை உறுப்புநாடுகள் கண்காணித்துக் கொள்ளும்.

## உறுப்பு நாடுகளுக்குள் அனுமதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அந்நாட்டில் தங்கியிருத்தல் தொடர்பிலான நிபந்தனைகள்.

அமைச்சர்களின் தீர்மானம் பின்வருமாறு:

(அ) குடும்ப ஒன்று சேர்வு என்பதன் அடிப்படையில் தங்குவதற்காக ஒருவருக்கு வழங்கப்படும் அதிகாரம், அத்தகைய அனுமதிக்கு அடிப்படையான கட்டளைக் கல்லை அவர் நிறைவேற்றுகிறாரா என்பதைப் பொறுத்து உறுப்புநாடு தீர்மானிக்கக்கூடிய காலத்திற்கு மட்டும் வரையறுக்கப்படும்.

(ஆ) அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து வரும் போதுமான காலத்துக்குள், குடும்ப உறுப்பினர்கள், ஒவ் வோர் உறுப்பு நாட்டினதும் தேசியச் சட்டத்திற்கு இணங்க, குடும்ப ஒன்று சேர்தல் என்ற ரீதியில் எவ ரோடு சேர்ந்தாரோ அவரை விட்டு நீங்கித் தனித்து வாழ அனுமதிக்கப்படுவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(இ) தங்குவதற்கான குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரமானது, அது மோசடி மூலம் அல்லது போலி ஆவணம் புனைதல் மூலம் பெறப்பட்டது என்று கருதுவதற்குக் காரணம் இருப்பின் நீக்கப்படலாம்.

## நுழைவதற்கும் தங்கியிருப்பதற்குமான பொது நிபந்தனைகள்

(அ) உறுப்பு நாட்டினால் வழங்கப்பட்ட விசா இருந்தாலொழிய குடும்ப ஒன்று சேர்வுக்காக ஆளொருவர் ஓர் உறுப்பு நாட்டிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார். விசாவுக்கான விண்ணப்பம் அந்தக் குடும்ப உறுப்பினர் சம்பந்தப்பட்ட உறுப்புநாட்டிற்கு வெளியே இருக்கும்போதே செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட உறுப்பு நாட்டிற்குள் நுழைந்து வாழ்வதற்குரிய கட்டளைக் கல்கள்(நியமங்கள்) எல்லாவற்றையும் நிறைவேற்றினாலொழிய விசா வழங்கப்பட மாட்டாது.

(இ) உறுப்பு நாட்டினால் அங்கீகரிக்கப்பட்ட செல்லுபடியான பயணப் பத்திரங்களைக் குடும்ப உறுப்பினர்கள் வைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) குடும்ப உறுப்பினர்களைச் சம்பந்தப்பட்ட உறுப்பு நாட்டிற்குள் அனுமதிப்பது பல நிபந்தனைகளைக் கொண்டிருக்கும்; அதாவது சம்பந்தப்பட்ட உறுப்பு நாட்டில் அவர்களுக்குத் தங்குமிட வசதி இருக்க வேண்டும்; அரசாங்க நிதிகளில் பளு ஏற்படுத்தாத அளவுக்குப் போதுமான வளங்கள் இருக்க வேண்டும்; நோய்ப் பாதுகாப்புக்கான காப்புறுதி இருக்க வேண்டும். இவ்வேற்பாடு தஞ்சம் கோருவோர், விருந்தினர், மாணவர் ஆகியோர் காப்புறுதியின்றி மருத்துவ வசதி பெறுவதை மேற்படி ஏற்பாடு தடுக்கும் என்று பரவலாக நம்பப்படுகிறது.

(உ) குடும்ப உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்ட உறுப்பு நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுத் தங்கியிருப்பது அந்த நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அல்லது பொது நலக் கொள்கைக்குக் குந்தகமாக இருப்பின் உறுப்பு நாடு அத்தகையவர் வருவதை அனுமதிக்க மறுக்கலாம். பொது சுகாதார நலனை முன்னிட்டும் ஒருவரை வராதவாறும், வந்திருந்தால் தொடர்ந்து தங்காதவாறும் உறுப்பு நாடுகள் மறுக்கலாம்.

## அநுமதியின்றித் தங்கியிருக்கும் அல்லது வேலை செய்யும் மூன்றாம் நாட்டுப் பிரஜைகள்

சட்ட விரோதமான குடிவரவு பற்றிய விடயத்தில் ஒரே சீரான அணுகு முறையை ஊக்கிவிப்பதற்கு கூடிய முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று குடிவரவுக்குப் பொறுப்பான ஐரோப்பிய சமூக அமைச்சர்கள் உடன்பாடு கண்டுள்ளனர். சட்ட விரோதமான குடிவரவைச் சமாளிப்பதற்கு அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்கள். இதன் கருத்து என்னவென்றால் குடிவருவோரை இனிமேல் கடுமையாகச் சோதனை செய்வார்கள் என்பதோடு, செல்லுபடியான தங்கல் அனுமதிப் பத்திரம் இல்லாத மூன்றாம் நாட்டுப் பிரஜைகள் வெளியேற்றப்படுவர்.

கட்டில்லாத குடிவரவைத் தடுப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், தம் நாட்டிற்குள் சட்ட விரோதமாக நுழைந்தோ அல்லது தங்கியிருந்தோ வேலை செய்வோரையும் வேலை செய்வதற்கான உரிமையைக் கொடாத குடிவரவு அந்தஸ்தைக் கொண்டோர் வேலை செய்வதையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்ற கொள்கையையும் அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

மூன்றாம் நாட்டுப் பிரஜைகள் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேற்படத் தங்கியிருக்காதவாறு அதிகாரமில்லாது அவர்கள் வேலை செய்யாதவாறும் தடுப்பதை அமைச்சர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும் என்றும் அக்கூட்டத்தில் உடன்பட்டுக் கொள்ளப்பட்டது. அமைச்சர்களின் கருத்துப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பொதுவிதி என்னவென்றால் ஐரோப்பிய சமூகத்துக்குள் கட்டுப்பாடில்லாமல் நடமாடுவதற்கு உரித்தில்லாதவர்கள் உறுப்பு நாடுகளுக்குள் தங்கியிருக்கக் காணப்பட்டால் அல்லது நுழைந்திருக்கக் காணப்பட்டால் அல்லது பொதுநலக் கொள்கையின் பேரில் அல்லது தேசியப் பாதுகாப்பின் பேரில் வெளியேற்றப்படற்குரியவர்களாகக் காணப்பட்டால், அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்பதே. தஞ்ச விண்ணப்பத்தில் தோற்று, தங்கியிருப்பதற்கு வேறெந்தக் காரணம் கொண்டிராதவர்களும் வெளியேற்றப்படுவார்கள். எனினும் மனிதாபிமான அடிப்படையில் புறக்கணிக்க முடியாத காரணங்கள் இருப்பின், அவர்கள் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவர்.

குடிவரவுச் சட்ட ஏற்பாடுகளையோ அவற்றை ஒத்த ஏற்பாடுகளையோ மீறி வேலை செய்து கொண்டிருப்பவர்களை உறுப்பு நாடுகள் வெளியேற்றலாம். குடிவரவுச் சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டவர்களும், சட்ட விரோதமான ஆட்கள் நுழைவதற்கு வழிவகுப்போரும், சட்ட விரோதமான ஆட்களைப் பாதுகாத்து வைப்போரும், அவர்களை வேலைக்கமர்த்துவோரும் வெளியேற்றப்படற்கு உரியர்.

அதிகாரமில்லாமல் தங்கியிருப்பவர்களாக அல்லது வேலை செய்பவர்களாக அறியப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட ஆட்கள் (தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் உட்பட) தொடர்பில் கடும் சோதனைகள் நடாத்தப்படும்.

இதை எய்தும் வகையில், இருப்பதற்கு அனுமதியிருந்தும் வேலை செய்வதற்கு அனுமதி பெற்றிராத ஆட்கள் தொடர்பிலும், வதிவதற்கான அனுமதிப் பத்திரம் இருந்தும், வரையறுக்கப்பட்ட வேலை அனுமதிப் பத்திரம் மட்டும் கொண்டிருக்கும் ஆட்கள் தொடர்பிலும்; விருந்தினர் அல்லது சுற்றுலாப் பயணிகள் என்ற ரீதியில் குறுகிய காலத்திற்கு அனுமதி பெற்றிருந்தும் அதிகாரமில்லாமல் வேலை செய்யும் ஆட்கள் தொடர்பிலும் உறுப்பு நாடுகள் சோதனைகளை மேற்கொள்ளும்.

குடும்பத்துடன் ஒன்று சேர்வதற்கென அதிகாரம் அளிக்கப்பட்டவர்களும்; உறுப்பு நாட்டில் வதிகின்ற ஒருவரைத் திருமணம் செய்தவர் என்ற அடிப்படையில் வதிவு அனுமதிப் பத்திரம் அல்லது வேலை அனுமதிப் பத்திரம் பெற்றவர்களும் தமக்கு அளிக்கப்பட்ட சலுகையைத் துர்ப்பிரயோகம் செய்கிறார்களா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகச் சோதனைகளை மேற்கொள்ளும் திட்டமும் அவர்களிடம் இருப்பதாகத் தெரிகிறது.

மேற்படி சோதனைகள் பற்றி விசாரணைகள் மூலம் எமக்கு இன்னும் சில விடயங்கள் வெளியாகியுள்ளன. உறுப்பு நாடுகளிற்கிடையே நெருக்கமான இணைப்பும் தகவல் பரிமாறலும் இருக்கும். இத்தகைய புதுப் போக்குகள் தனியார்களின், அதாவது மூன்றாம் உலகத்திலிருந்து வரும் தனியாட்களின் சுதந்திரத்தைப் பெருமளவு பாதிக்கும் என்று சமூகக் குழுக்களும், மனித உரிமைப் பணிபுரிவோரும், சமூக சேவைப் பணிபுரிவோரும் அஞ்சுகின்றனர்.


மேலும் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வந்தவர்கள் எளிதில் பெரும் சந்தேகத்திற்கு உள்ளாகக் கூடியவர்கள் என்பதால், அவர்களே துன்புறுத்தலுக்குள்ளாவர்கள் என்றும் கருதப்படுகிறது.

தஞ்சம் கோரும் நோக்கில், நாட்டெல்லைகளைக் கடந்த தமிழர் பலர் சமீபத்தில் வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் உண்டு. அதற்குக் காரணம், அங்கத்துவ நாடுகளிடையே ஏற்பட்டுள்ள இணைப்பே. அதன் மூலம், ஒரு நபர் எங்கிருந்து வந்தாரோ, அந்நாட்டில் அவரின் குடிவரவு அந்தஸ்து, தங்கியிருந்த காலம் போன்ற அனைத்து விபரங்களையும், அவர் புதிதாக வந்தடைந்த நாட்டினர் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதே. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# புரட்சிகளின் விளைவான அகதிகள்: அமெரிக்கக் கொள்கையும் மூன்றாம் உலக மக்கள் இடப்பெயர்வும்

பனிப்போர் முடிந்ததும், பெரும் எண்ணிக் கையிலான மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். சர்வ தேச உறவுகளைப் பாதிக்கும் அளவுக்கு இடப் பெயர்ச்சி முக்கியத்துவம் அடைந்தது. இக்கால கட்டத்தில் தெற்கிலிருந்து வடக்கிற்கு ஏற்பட்ட மக்கள் நகர்வின் தாக்கத்தை, இந்நூல் ஆராய்கின்றது. அத்துடன் அமெரிக்க அரசின் வெளியுறவுக் கொள்கை, அகதிகள், குடிவரவு பற்றிய கொள்கைகள் என்பவற் றிற்கிடையேயான உறவு பற்றியும் இந்நூல் தனது நோக்கில் கையாண்டுள்ளது. அமெரிக்காவினது அகதிகள் பிரச்சினையை மட்டும் பகுத்தாயாது உலக நாடுகளின் மக்கள் இடப்பெயர்வுக்கான காரணிகளையும் உள்ள டக்கியதனால் இந்நூல் முக்கியத்துவம் பெறுகின்றது. அகதிகளுக்கும், இடப்பெயர்விற்குமிடையே உலகளாவிய ரீதியில் காணப்படும் இணைப்பினை இனங்கண்டு கொண்ட சில ஆய்வுகளில் இந்நூலும் ஒன்றாகும்.

கியூப மக்கள், இந்தோசீனர், ஈரானியர், எத்தி யோப்பியர் என்ற நான்கு தேசிய இனத்தவர் எவ்வாறு புரட்சியிலிருந்து தப்பி இடம்பெயர்ந்தனர் என்பதை இந்நூல் கூர்ந்து நோக்குகின்றது. உள்நாட்டு நிலைமைக ளினால் ஏற்பட்ட புரட்சிகளில் வல்லரசுகள் முக்கியமாக, அமெரிக்காவின் தலையீட்டினால் மோசமாக்கப்பட்ட கட்டத்தில், சனத்தொகை இடப்பெயர்ச்சி ஏற்பட்டது என்பதும் தெளிவாக்கப்படுகின்றது. இதற்காகப் பல ஆய்வு உத்திகளை ஆசிரியர் கையாண்டுள்ளதோடு தனிநபர், தேசம், சர்வதேச சமூகம் என்ற நிலைகளி லிருந்தும் மக்கள் இடப்பெயர்ச்சியைப் பகுத்தாய்கின்றார். அகதியாகப் பரிமாணித்தல், இடம் பெயர்தல், தஞ்சம் தேடுதல், மீளக்குடியமர்தல், புதிய சமூகத்தில் இணைதல், முடிவில் தன் நாடு திரும்பல் என்ற படிமுறைகளைப் பகுத்தாய்ந்து வருங்காலத்தில் ஒருங்கிணைந்த கொள்கைத் திட்டத்தை எவ்வாறு நிச்சயிக்க வேண்டும் என்றும் நூலில் கூறப்பட்டுள்ளது.

முடிவுரையில் அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் கைக்கொள்ளக்கூடிய பல வழிமுறைகள் எடுத்துக் கூறப் பட்டுள்ளன. நடைமுறைப்படுத்தப்பட்டால், இவ்வழி முறைகள் அகதிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெகுதூரம் உதவும். தொழில்மய மக்கள் அரசுகள் ஆயுதவிற்பனைக் கட்டுப்பாடு, குறைந்த ராணுவத் தலையீடு, கூடிய வணிகம், உதவி என்பவற்றை உள் ளடக்கிய தொலைநோக்குடைய கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

வளர்ச்சியுறும் நாடுகளும் தமது சமய, இனச் சிறு பான்மையினருக்கு இடமளித்தும், தொடர்துயர் அளிக் காதும் இருத்தல் வேண்டும். இதுவரை கண்டிராத தெற்கு-வடக்கு இணக்கப்பாடும், பலதரப்பினரின் மிகுந்த பொறுமையிலும், புத்திசாதுரியத்திலும் தங்கி யிருக்கும் ஒரு உன்னத நிலையினைக் கோடிட்டுக் காட்டும் வகையில் இந்நூலின் உள்ளடக்கம் கொள்ளை வகுப்போருக்குச் சிறந்த வழிகாட்டியாகும். □

## தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளின் நிராதரவான நிலை: தமிழக அரசிடம் அரசு சார்பற்ற நிறுவனங்களின் வேண்டுகோள்

அரசு முகாம்களில் உள்ள தமிழ் அகதிகளுக்கு, உள்ளூர் அரசு சார்பற்ற நிறுவனங்கள் அளித்து வரும் உதவித்திட்டங்களை மட்டுப்படுத்தும் வகையிலான கட்டளை ஒன்றை மே மாதம் 27 ஆம் திகதி தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

தமிழ் தகவல் நடுவத்திற்குக் கிடைத்துள்ள தகவலின்படி, அரசின் இக்கட்டளை, முகாம்களில் வாழும் சிறுவர்க ளையும், தாய்மாரையும், முதியவர்களையும் பெரிதும் பாதிக்குமென அறியப்படுகிறது. ஏனெனில் தற்போது கிடைக்கும் உதவிகளான போஷாக்குணவு, கல்வி, பொழுதுபோக்கு வசதிகள் அனைத்தையும் அக்கட்டளை மூலம் தமிழக அரசு நிறுத்தியுள்ளது.

மேலும் இப்புதிய கட்டளை, தொழிலுக்காக முகாமிலிருந்து வெளியே சென்று வரக்கூடிய கால எல்லையை யும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையாக்கியுள்ளது. இதனால் முகாம்களுக்கு அருகிலுள்ள கிராமங் களுக்குச் சென்று தொழில் செய்து ஊதியம் தேடுதல் முடியாததாகிவிடும் என அரசு சார்பற்ற நிறுவனங்கள் அறியத் தருகின்றன.

இக்கட்டளையையிட்டு, உலக தேவாலயச் சபை (சுவிஸ்), கரிடாஸ் நிறுவனம் (இத்தாலி), ஒல்லாந்துத் திருச்சபை உதவி நிறுவனம், பிரித்தானிய அகதிகள் மன்றம் போன்ற பல அரசு சார்பற்ற வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் தமிழக அரசிடம் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளன.

மனிதாபிமான அடிப்படையில், பயனுள்ள வகையில் அகதிகளுக்கு உதவத் தயாராகவுள்ள உள்ளூர் தொண் டர் நிறுவனங்களுடனும், அகதி அமைப்புக்களுடனும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு உடன் நடவ டிக்கை எடுக்குமாறும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் தமிழக ஆளுநரையும், முதலமைச்சரையும் கேட்டுள்ளன.

தமிழ் நாடு அகதி முகாம்களில் உள்ள தமிழரின் துயரச்சுமையைக் குறைக்க வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களும், முக்கியமாக தமிழர் தாபனங்களும், அகதி தாபனங்களும் இது போன்ற வேண்டுகோளினை விடுப்பது முக்கியமானதாகும். இத்தகைய வேண்டுகோள் அனுப்பப்பட வேண்டிய முகவரிகள்:

Mr. Chenna Reddy , Hon. Governor of Tamil Nadu , Raj Bhavan, Guindy, Madras, Tamil Nadu, India

Ms Jayalalitha Jayaram, Hon. Chief Minister of Tamil Nadu, Chief Minister's Office, Fort St. George, Madras 600 109, Tamil Nadu, India



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆய்வுத் தகவல் பலகணி

## சிறுவர், போர், ஆய்க்கினை அநியாயம் பற்றிய ஆராய்ச்சி மகாநாடு

சிறுவர், போர், ஆய்க்கினை அநியாயம் என்ற விடயம் பற்றிய ஆராய்ச்சி மகாநாடொன்று 1993 செப்டம்பர் 26 - 29 திகதிகளில் ஜேர்மனியின் ஹம்போர்க் நகரில் நடைபெறவுள்ளது. 1990ஆம் ஆண்டில் ஜெருசலம் நகரில் நடந்த மகாநாட்டின் தொடர் நடவடிக்கையே ஹம்போர்க் மகாநாடு. அங்கு,

1. நாஜிகளின் கொடுங்கோலாட்சியில் சிறுவரும் இளம் பருவத்தினரும் அனுபவித்த ஆய்க்கினை அநியாயங்கள்;
2. போர், அரசியல் அடக்குமுறை என்ற வகையிலான திட்டமிட்ட வன்முறைகள் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் சிறுவர் ஆய்க்கினை அநியாயங்களுக்குட்படுதல்;
3. ஜேர்மனியில் உள்ள அகதிச் சிறுவரின் உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள், பாதுகாப்பு, வைத்தியம், பாதிப்பு நிலைக்கு ஆளாகாமை,

ஆகிய மூன்று விடயங்கள் பிரதான ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இம்மகாநாடு பற்றிய மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

*University Clinics of Hamburg*
*Child and Adolescent Psychiatry*
*Martinistrasse 52*
*2000 Hamburg 20, Germany*
*Tel: +49 40 47172230*
*Fax: +49 40 47175169*

## சர்வதேசக் கருத்தரங்கு சித்திரவதையும் வைத்தியத்துறையும்

சித்திரவதையும் வைத்தியத்துறையும் என்ற தலைப்பிலான 6வது சர்வதேசக் கருத்தரங்கு ஒக்டோபர் 20 - 22இல் ஆர்ஜென்டினாவின் தலை நகரான புவனெஸ் ஆரெசில் நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

*Professor Erik Holst, MD*
*Executive Vice President,IRCT*
*P.O.Box 2672*
*DK-21000 Copenhagen*
*Denmark*
*Tel: +45 31 39 46 94*
*Fax: +45 31 39 50 20*

## உளவியல் வைத்திய மகாநாடு

திட்டமிட்ட வன்முறைகளுக்கு ஆளாகியோரைப் பேண உதவும் உளவியல் வைத்திய முறைகள் என்ற பொருள் பற்றிய மகாநாடொன்று, ஓகஸ்ட் 9 - 14 வரை இங்கிலாந்தில் ஒக்ஸ்போட்டில் நடைபெறவுள்ளது. இம்மகாநாடு பற்றிய விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

*The In-Service Training Office*
*Refugee Studies Programme*
*Queen Elizebeth House*
*21 St.Giles,*
*Oxford, OX1 3LA, UK*
*Tel: +44 865 270 722*
*Fax: +44 865 270 721*

## அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை இலங்கைக்கு அனுப்ப முத்தரப்பு ஒப்பந்தம்

சுவிற்சலாந்து, இலங்கை அரசாங்கங்களும் ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதியும் அண்மையில் சுவிற்சலாந்தில் கூடி, சுவிற்சலாந்தில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களை இலங்கைக்கு அனுப்பும் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றினை அங்கீகரித்துள்ளனர். அதன் பிரகாரம் முதற்கட்டமாக, 200 பேர்வரை இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளனர். மேலும் 1992 செப்டம்பர் முதலாம் திகதிக்குப்பின் வந்தவர்களும் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் என அறியப்படுகின்றது.

இலங்கை அரசு - மேற்கு நாடொன்று - ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றிடையில், தமிழ் அகதிகள் தொடர்பிலான முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்நடவடிக்கையை முன்மாதிரியாகக்கொண்டு ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பின்பற்ற யோசித்துள்ளதாக அறியப்படுகிறது. மேலும், அண்மைக்காலத்தில் ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அகதிகள் சம்பந்தமான கொள்கைகள் மாற்றத்தின் விளைவும், இந்நடவடிக்கைக்கு ஒரு காரணம் எனவும் நாம் கருதுகிறோம்.

## தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்தியும் புனரமைப்பும்

'இலங்கையிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான நோர்வே உதவி என்ற சிறுநூலினை நோர்வே மொழியில் வெளியிட்டிருப்பதாக, சமீபத்தைய பத்திரிகை அறிவித்தல் ஒன்றில், நோர்வே தமிழர் அபிவிருத்தி இணைப்புத் தெரிவித்துள்ளது.

தமிழர் பிரச்சினையில் அக்கறையுள்ள பாராளுமன்ற உறுப்பினர், அரசியல் கட்சிகள், அரசு சார்பற்ற ஸ்தாபனங்களுக்கும் ஏனையோருக்கும் விநியோகிப்பதன் மூலம், தமிழ்ப் பிரதேசங்களுக்குத் தேவையான வளங்களைத் திரட்டி அனுப்புதில் அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கான பிரசாரங்களைச் செய்வதே அப்பிரசுரத்தின் நோக்கமாகும்.

அப்பிரசுரத்தின் ஆங்கில மொழியிலான பிரதியினைக் கீழ்க்கண்ட முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

Tamil Development Network Norway
Sondre Tollbugt. 2
9008 Tromso, Norway Tel: + 47 83 10344

## இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பியனுப்புவதில் தமிழக அரசின் நிர்ப்பந்தம்

அகதி முகாம்களுக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள், பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சிறுவர்களதும் கைரேகைகள் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்வதற்காக, இலங்கைத் தமிழர் மணிக்கணக்காக பொலிஸ் நிலையங்களில் காத்திருக்க வேண்டியுள்ளது. அகதிகள் வசிக்கும் வீடுகளுக்குச் சென்று பொலிசார் அச்சுறுத்துகின்றனர்.

விசாக்காலம் நீடிக்கப்படுவது அபூர்வம். விசா அல்லது கடவுச்சீட்டு காலாவதியான பலர், பெண்கள் உட்பட, கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். விசாவை நீடிப்பதற்கு அதிகாரிகள் பெருந்தொகையை லஞ்சமாகக் கோருகின்றனர். அதே வேளை விசா அற்றவர்களுக்கு ரூபாய் 200 அபராதம் விதிக்கப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ் தகவல் நடுவத்தின்
புதிய வெளியடு

# ECONOMIC BLOCKADE

# பொருளாதாரத் தடை

ஆசிரியர்:
மாயன் விஜே

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே 1990இல் மீண்டும் போர் ஆரம் பித்ததிலிருந்து, தமிழ்ப் பிரதேசமான வட, கிழக்கு மகாணங்களில் வாழும் தமிழருக்கெதிராக உத்தியோகப் பற்றற்ற பொருளாதாரத் தடை இருந்து வருகிறது. ஆனால் 1991இல் 48 பொருட்களை வடக்கிற்கு எடுத் துச்செல்வதை அரசு உத்தியோக பூர்வமாகத் தடை செய்தது. மருந்து வகைகள், எரிபொருள், கட்டடப் பொருள்கள் என்பனவும் இவற்றுள் அடங்கும். உணவு வகைகளுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. யாழ் குடாநாட்டிற்கு அனுப்பப்படுவதாக அரசு அறிவிக்கும் உணவுத் தொகையில் சிறிதளவு மட்டுமே உண்மையில் அங்கு போய்ச் சேருகின்றது. கிழக்கிற்கு உத்தியோகபூர்வ பொருளாதாரத் தடை இல்லாவிடினும் உணவு, எரி பொருள், போக்குவரத்து ஆகியவற்றிற்கு, ராணுவத் தினால் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத் தடை காரணமாகத் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இடர்களை கொழும்புச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் எடுத்துச் சொல்வதில்லை. பொருளாதாரத் தடையின் விளைவான போஷாக் கின்மையினாலும் நோயினாலும் மருத்துவ வசதியின் மையாலும் குழந்தைகள் பலர் இறந்துமுள்ளனர். இவைபற்றியெல்லாம் அறியக்கூடிய வாய்ப்பு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆர்வமுள்ள வெளிநாட்டு மக்க ளுக்கும், மனிதநேய, மனித உரிமை தாபனங்களுக்கும் ஏற்படுவது இல்லை என்றே கூறலாம்.

வடக்கிற்கான போக்குவரத்துப் பாதைகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளமையால், யாழ் கடலேரியைக் கடக்க முயற்சிக்கும் பொதுமக்கள் பலர் இலங்கைக் கடற் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் செறிந்து வாழும் இடங்களில் விமானக் குண்டு வீச்சினாலும் படைமுகாம்களிலிருந்தும், கடற்படைப் படகுகளிலி ருந்தும் ஏவப்படும் 'ஷெல்' வீச்சினாலும் ஏற்படும் அழி வுகள் எண்ணிலடங்காது. பல உயிர்ச் சேதங்களும், பெருமளவில் பொருள் சேதங்களும் ஏற்பட்டும் உள் ளன.

மனித உரிமைகள் துச்சமென மறுக்கப்பட்டு வரும் இவ்வேளையில் இலங்கை அரசும், மேற்கத்தைய அர சுகளும், மனித உரிமையைப் பேணுவதில் இலங்கை அரசின் செயற்பாடுகளில் முன்னேற்றம் உண்டென எடுத்துக்காட்ட, முனைப்புடன் செயற்படுகின்றன.

முன்னொருபோதுமில்லாத வகையில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர், '1993 மார்ச்சில் மனித உரிமைகள் பேணப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன' என்று அரசு விடுத்த அறிக்கையை, சரியென்று ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். அரசு சார்பற்ற சர்வதேச மற்றும் இலங்கை நிறுவனங்கள் அப்படியான நிலை இலங்கையில் கிடையாது என்று எடுத்துரைத்ததை ஆணைக்குழுத் தலைவர் கவனத்தில் எடுத்துக்கொள்ளாது, தனது நிலைப்பாட்டை வெளி யிட்டுள்ளார்.

மனித உரிமை மதிப்பிற்கு முன்னுரிமை கொடாது, தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்படுதலுக்கு முக்கி யத்துவம் கொடுக்கும் மேற்கத்தைய அரசுகளின் விருப் பினையிட்டு, நாம் கவலையடைகின்றோம். இத்தகைய சூழலில் வட, கிழக்கு மக்கள் மேலும் இடர்ப்படவும், உயிரிழக்கவும், அழிவுகளை எதிர்நோக்கவும் வேண்டி வரும். மேற்கத்தைய அரசுகளினதும் இலங்கை அரசி னதும் பிரசாரங்களுக்கு, எதிர் நடவடிக்கைகள் அவசி யம் என நாம் கருதுகிறோம். இந்நோக்குடன் பொரு ளாதாரத் தடையின் தாக்கங்களை விரிவாக எடுத்துக் காட்டும் ஆய்வு அறிக்கையை தமிழ் தகவல் நடுவம் வெளியிட்டுள்ளது.

பொருளாதாரத் தடை என்னும் சொற்பிரயோகம் சாதாரணமாக எல்லோராலும் கையாளப்பட்டு வந்தா லும், அது எவ்வளவு ஆழமான ஒரு விடயம், இலங்கை அரசின் உள்நோக்கமென்ன, அதன் நீண்டகாலப் பாதிப்புகளென்ன என்பதை இந்நூல் தெளிவு படுத் துகின்றது.

மாணவர்களும், அவர்கள் கல்வி நிலையும், போக்கு வரத்து இடர்ப்பாடுகள், தொடர்பு சாதனங்களின் மையால் எழும் பிரச்சினைகள், விவசாயம், கைத்தொழில், மற்றும் தொழில் துறைகளில் காணப்படும் பாதிப்புகள், மக்கள் சிதறிப்போதல், இராணுவத்தினரின் கொலைகள் போன்றவை வெளிக்கொணரப்பட்டுள்ளன.

பொருளாதாரத் தடை என்பது பெருமளவிற்கு ஜெனீவா ஒப்பந்த மரபுக்கு முரணானதே. போர்க் காலங்களிலும் மக்களைப் பட்டினிக்குள்ளாக்குவது, மருத்துவ வசதிகளை இல்லாமற் செய்வது என்பதும் பட்டினியையும், மருத்துவ வசதி போன்றவற்றையும் ஓர்ஆயுதமாக - தந்திரோபாயமாகப் - பயன்படுத்துவது ஏற்க முடியாததாகும். இது பற்றியும், இந்நிலைமையைத் தவிர்க்க எத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

ஜூன் மாதம் 19ஆம் திகதி ஜெனிவாவில் நடை பெற்ற, இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள் சந்திப் பில் பங்கு பற்றிய அரசுகளின் கவனத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட இவ்வறிக்கை அரச தாபனங்களுக்கும், மனிதநேய, மனிதஉரிமை தாபனங்கள் அனைத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள் தொடர்ந்தும் நிதி வழங்குமாயினும், இந்நூலில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக, தமிழ் மக்களின் மனித உரிமை பேணப்பட வேண்டும் என்ற வற்புறுத்த லுக்கு இலங்கை அரசு ஆளாகும் என்று நம்பலாம்.

இவ் ஆய்வு அறிக்கை, இலங்கைத் தமிழர்களின் சார்பில் அரசியல் தஞ்ச விண்ணப்பங்களைத் தயார் செய்யும் அகதி தாபனங்களுக்கும், குறிப்பாக சட்டப் பிரதிநிதிகளுக்கும், மிகவும் பயனுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நூல் பற்றிய மேலதிக விபரங் களைத் தகவல் நடுவத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதிகள் நலனும் பாடசாலை ஆசிரியர் புரிந்துணர்வும்

பாடசாலை ஆசிரியரிடையே அகதிகள் பற்றிய சரியான புரிந்துணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன் பிரித்தானிய அகதிகள் மன்றம் மே 12 ஆம் திகதி கருத்தரங்கு ஒன்றை நடாத்தினர். தமிழ் தகவல் நடுவத்தின் பிரதிநிதியாக திரு ப.சங்காரவேல் கருத்தரங்கில் பங்கு பற்றினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய இவர், மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பல இன்னல்களுக் கிடையிலும், பாரபட்சமின்றி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்குத் தன்னாலான சேவையைச் செய்தவர். இறுதியில் மக்களுக்கு உதவி புரிய முடியாது, தன் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலையில்,நாட்டை விட்டு வெளியேறி பிரித்தானியாவில் தஞ்சம் கோரியுள்ளார். பிரித்தானியாவிலும், இவர் தமிழ் தகவல் நடுவத்தின் ஓர் ஆலோசகராக இருப்பது மாத்திர மன்றி, மேலும் பல சமூக, அகதி தாபனங்களில் உற்சாகமான அங்கத் தவராகவும் சேவை புரிந்து வருகிறார்.

கருத்தரங்கில், இலங்கையில் அகதிகளைத் தோற்றுவித்த அரசியல், ராணுவக் காரணிகள் பற்றியும், தமிழ் அகதிகள் தஞ்சம் கோருவதில் பிரித்தானியாவைத் தெரிவு செய்வதற்கான காரணம் பற்றியும், அவர்களின் எண்ணிக்கை என்ற பொதுவான விடயங்களையும் விளக்கிய பின் தமிழ் மாணவர் (அகதி) பற்றிய விடயங்களை, முக்கியமாக அவர்களது மனோநிலையை - நிரந்தரமற்ற வாழ்வு, பொருளாதார நிலை, தனிமை வாழ்க்கை, பெற்றோரைப் பிரிந்தும், இழந்தும் வாழும் நிலை, படிப்பில் ஏற்படக்கூடிய தடங்கல்கள், மொழிப்பிரச்சினை போன்றவற்றை உதாரணங்களுடன் எடுத்துக்கூறி, ஆசிரியர்களுக்கு விளக்கமளித்தார்.

இதில் குறிப்பிட்டதொரு விஷயம் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. அது பின்வருமாறு:

லண்டன் பாடசாலை ஒன்றில் மதிய உணவு வேளையிலும்கூட வகுப்பறையில் ஒரு தமிழ்ச் சிறுமி தனிமையாக இருப்பதை கவனித்து வந்த ஒரு ஆசிரியர், அந்தச் சிறுமி விளையாட்டு நேரத்திலும்கூட தனிமையில் இருப்பதற்குக் காரணம் என்ன என்று கண்டறிய முனைந்தார். அடக்கமும், ஒழுக்கமும் உள்ள அழகான அச்சிறுமி ஒரு சிறிய உணவுப் பெட்டியில் ஒரு பணிஸ், ஒரு வாழைப்பழம், இரண்டு டொபி, ஒரு சிறிய போத்தலில் ஒறேஞ் ஜூஸ் ஆகியவற்றை அழகாக அடுக்கிக் கொணர்ந்து, மெதுவாக அதனைத் திறந்து மிகவும் கவனமாக நிலத்தில் சிந்தாது, அருந்துவதைக் கவனித்து வந்தார் ஆசிரியர். படிப்பில் கெட்டித்தனமும், ஆங்கிலச் சொற்களை இலகுவாகப் புரிந்து தக்க மறுமொழி கூறக்கூடிய ஆற்றலுள்ள அந்தச் சிறுமி, காலையிலிருந்து மாலை வரை தனிமையிலேயே இருக்க விரும்பும் புதிர் என்னவென்று யாருக்குமே புரியாதிருந்தது.

அச்சிறுமியின் நிலைபற்றி ஆசிரியர் தற்செயலாக அகதி தாபன அங்கத்தவர் ஒருவருடன் கதைத்தபோது, இருவரும் பெற்றோரைச் சந்திக்க முடிவெடுத்தனர். ஆசிரியரின் சிரத்தையால் பெற்றோர் (தாய்) வரவழைக்கப்பட்டு, மொழி பெயர்ப்பாளர் உதவியுடன் விசாரிக்கப்பட்டார். அப்போது, தாயும் மகளும் இலங்கை யிலிருந்து வந்த அகதிகளென்றும், கவுன்சில் அறையொன்றில் அவர்கள் தனிமையாக வாழ்வதனையும், அறைக்கு இரு பக்கமும் வேறு இனத்தவர் வசிக்கின்றபடியால், ஏறத்தாழ ஒன்பது மாதங்களாக அவர்கள் அறையை விட்டுத் தேவையின்றி செல்வதில்லை என்பதினையும் அறியக்கூடியதாக இருந்தது. படிப்பு, உறக்கம், சமையல், சாப்பாடு, விளையாட்டு, மௌன வாழ்வு எல்லாமே அச்சிறுமிக்கு அவ்வறையில்தான். அதன் தாக்கமே, மதிய உணவு வேளையிலும் வகுப்பை விட்டு வெளியே செல்ல விரும்பாது, தனிமையாக இருப்பதற்குக் காரணம் என அறியக்கூடியதாக இருந்தது. உள்ளூர் சபையுடனும், அகதிகள் உதவித் தாபனத்தின் உதவியுடனும் பாடசாலை நிர்வாகம் எடுத்த முயற்சியினால், அவர்களுக்கு வேறு ஒரு வீடு கிடைத்தது; காலாற வீட்டில் நடக்க இடம் கிடைத்தது. வீட்டுக்கருகாமையில் விளையாட்டு மைதானமும், பல தமிழ்க் குடும்பங்களும் இருந்ததால் அச்சிறுமியின் நடத்தையில் ஏற்பட்ட பாரிய மாற்றத்தினை பாடசாலை நிர்வாகம் கண்டு திருப்தி யடைந்தது.

பல இன்னல்களுக்கிடையே உயிர் தப்பி அகதிகளாக வருபவர்களைப் புரிந்து கொள்ளவும், அவர்களுக்குச் சரியான வகையில் உதவவும், அவர்கள் வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், பாடசாலைகளினதும், அகதி தாபனங்களினதும் இணைந்த செயற்பாடுகள் அமையுமாயின், விளையும் நன்மை பற்றியும், அகதிகள் வளர்ச்சிக்கு சமுதாயம் எப்படி உதவலாம் என்பதையும் இந்த உதாரணம் சுட்டிக் காட்டியுள்ளது.

பாடசாலைகள் அகதிகளையோ அன்றி தாபனங்களையோ அணுகாவிடினும், அகதிகளைப் பேணிப் பராமரிக்கும் நோக்குடன் செயற்படும் தாபனங்கள், பாடசாலைகளை அணுகுவது முக்கியம் என்பதையும் இது உணர்த்துகின்றது. □

**மீட்சி:**

பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள், பல்துறை அறிஞர்கள், சமூகத் தொண்டர்களை உள்ளடக்கிய ஒரு சுயேட்சைக் குழுவின் படைப்பு.

**வெளியீட்டாளர்:**

TAMIL INFORMATION CENTRE, THAMIL HOUSE, 720 ROMFORD ROAD, LONDON E12 6BT. TEL: 081 514 6390

**சந்தா (12 இதழ்கள்):** U.K.: £6.00 **வெளிநாடுகள்:** £10.00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்